

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.2.2026) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கி, அவர்களுடன் உரையாடினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் திருமதி பி.கீதா ஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், த.மனோ தங்கராஜ், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.ஜி.பிரின்ஸ், எஸ்.ராஜேஷ்குமார், திருமதி தாரகை கத்பர்ட், மாநகராட்சி மேயர் மகேஷ், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர்.அழகுமீனா, மாநில உணவு ஆணையத் தலைவர் சுரேஷ் ராஜன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திருமதி ஹெலன்டேவிட்சன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆஸ்டின், திருமதி புஷ்பலீலா, மீனவர் நல வாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.2.2026) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் திருமதி பி. கீதா ஜீவன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், த.மனோ தங்கராஜ், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.ஜி.பிரின்ஸ், எஸ்.ராஜேஷ்குமார், திருமதி தாரகை கத்பர்ட், மாநகராட்சி மேயர் மகேஷ், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர். அழகுமீனா, மாநில உணவு ஆணையத் தலைவர் சுரேஷ் ராஜன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திருமதி ஹெலன்டேவிட்சன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆஸ்டின், திருமதி புஷ்பலீலா, மீனவர் நல வாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அருப்புக்கோட்டையில் தமிழ்நாடு தலைகுனியாது நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் கலந்து கொண்டு பேசினார். உடன் தலைமை செயற்குழு முன்னாள் சேர்மன் சுப்பாராஜ், சிவப்பிரகாசம், உறுப்பினர் சாகுல் ஹமீது, நகரச் செயலாளர் ஏ.கே.மணி, நெசவாளர் அணி பழனிச்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி தொகுதிக்குட்பட்ட காரியாபட்டி ஒன்றியத்தில் அரசகுளம் பகுதியில் ரூ. 45 லட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடத்தையும், முஷ்டக்குறிச்சியில் ரூ. 78.20 லட்சம் மதிப்பீட்டில் அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைச்சர் தங்கம் தென்னரசு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் ஒன்றியச் செயலாளர் கண்ணன், செல்வம், மாவட்ட கவுன்சிலர் தங்கத் தமிழ்வாணன், நகரச் செயலாளர் செந்தில் ஆகியோர் கலந்து கொண்டனர்.



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி , திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி, எல்லப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கலைஞர் நகரில் ரூ.642.46 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 182 கலைஞர் கனவு இல்லம் வீடுகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். அருகில், பழனி வருவாய் கோட்டாட்சியர் இரா.கண்ணன், நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் சிற்றரசு, கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் (பழனி சரகம்) செந்தில்வேல் பாண்டியன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் அன்பழகன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உதவி திட்ட அலுவலர் (வீடுகள்) பிரபாகரன், பிரபு பாண்டியன், காமராஜ் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.



மதுரையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் நடைபெறும் மண்டல அளவிலான மகளிர் சுய உதவிக் குழு உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் சந்திப்பு 2026 நிகழ்ச்சியினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்ததை தொடர்ந்து அவரது முன்னிலையில் மகளிர் சுய உதவிக் குழுவினர் மற்றும் விற்பனை நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் உசிலம்பட்டி சார் ஆட்சியர் உட்கர்ஷ் குமார், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், பகுதி செயலாளர்கள் பெ.சசிகுமார், மருது பாண்டியன் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்



தேனி வடக்கு மாவட்டம் தேனி நகர பகுதியில் வெல்லும் தமிழ் பெண்கள் இல்லந்தோறும் பரப்புரை வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. உடன் நகரச் செயலாளர் நாராயண பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் முருகேசன், மாவட்ட பிரதிநிதி பவுன்ராஜ், வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ராஜசேகரன் மற்றும் கழக மகளிர் அணி நகர அமைப்பாளர் கவுன்சிலர் கிருஷ்ணகுமாரி, விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் சுரேஷ், கவுன்சிலர்கள் கோகிலா, சந்திரகலா நாகராணி, கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# ஆத்தூர் தொகுதி கூட்டுறவு கலை - அறிவியல் கல்லூரி புதிய வகுப்பறை கட்டிடம்!

## அமைச்சர் பெரியசாமி தொடங்கி வைத்தார்!

திண்டுக்கல், பிப். 27 -

ஆத்தூர் அருகே சீவல்சரகில் உள்ள கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதிய வகுப்பறை கட்டிட திறப்பு விழா நேற்று நடைபெற்றது. கூட டுறவு சங்கங்களின் மண் டல இணை பதிவாளர் ஸ்ரீ ராகவ் பாலாஜி தலைமை வகித்தார். சரக துணை பதிவாளர் கவுதம் கார்த்திக், மத்திய கூட்டுறவு வங்கி வரு வாய் அலுவலர் கவுரி மீனா, தி.மு.க. தலைமை செயற்குழு ராஜன், சத்திய மூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், ராஜேந்திரன், ராமன், மாவட்ட கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் செல்வகுமார் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் பாலகுருசாமி வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரிய சாமி புதிய வகுப்பறை திறந்து வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களின் நலன் கருதிதான் இந்த கூட்டுறவு கலை கல்லூரி கொண்டு வரப்பட்டது.

இதன் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 3 ஆயிரம் மாணவ, மாணவிகள் பயன் பெற்றுள்ளனர். மாணவர்கள் வெளி மாவட்டங்களிலிருந்து வரும் மாணவர்களின் நலன் கருதி விரைவில் விடுதி வசதி ஏற்படுத்தி கொடுக்கப்படும். இக்கல்லூரியில் படிக்கும் அனைத்தும் மாணவர்களுக்கும் கல்வி தடைபடாமல் இருக்க 30 ஆண்டுகளுக்கான நலத் திட்டங்களை செயல்படுத்தபட்டுள்ளது. இதுதவிர இங்கிருந்து படிப்பு முடிந்து வெளியேறும் மாணவர் களுக்கு வேலை வாய்ப்பு வழங்கவும், அவர்களுக்கு ஏற்பாடுகள் நடந்து வருகிறது. இவ்வாறு பேசினார். தொடர்ந்து கல்லூரிக்கு விடுமுறை எடுக்காமல் வந்த சிறந்த ஆசிரியர்கள், மாணவர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு சார் பதிவாளர்கள் அம்பிகேஸ்வரன் மற்றும் அறிவழகன், அன்பரசு, பேராசிரிய பேராசிரியைகள், மாணவ, மாணவிகள், பெற்றோர்கள், அலுவலக பணியாளர்கள், கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கல்லூரி நிர் வாக அலுவலர் கணேசன் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.பி.பி.சாமி

**பிப்ரவரி 27 (2020)**



பாரம்பரிய தி.மு.க. குடும்பத்தில் பிறந்து, தனது மீனவப் பகுதியில் கழகம் வளர பாடுபட்டதோடு, மீனவ சமுதாயம் முன்னேற பாடுபட்டவர்.

திருவொற்றியூர் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர், நகர துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர், மாநில மீனவர் அணிச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து பணியாற்றியவர்.

2006, 2011 ஆகிய இரு முறை திருவொற்றியூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றதோடு, 2006ல் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் மீன்வளத் துறை அமைச்சராக பணியாற்றினார்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**